## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம், வேலூர் மாவட்டம்

முன்னிலை – திரு.M.N. ராஜநந்திவர்மசிவா. B.E., L.L.B.,
நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055 சோபகிருது வருடம் தை திங்கள்23 ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.286/2023**
**CNR NO. TNVL11-000224-2023**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
மேல்பட்டி காவல் நிலையம்
குற்ற எண்.86/2014,
U/s. 341, 294(b), 323, 324, 506(2) IPC .... குற்றமுறையிடுபவர்.

// எதிராக //

1) பாண்டு வயது 48/2024, த/பெ. முனிரத்தினம்.
2) கந்தன் வயது 37/2024, த/பெ. செல்வம்.
3) தினேஷ்பாபு வயது 38/2024, த/பெ. சோக்கு.

**அனைவரின் முகவரி:–**
அம்பேத்கர் நகர், கார்கூடர் கிராமம்,
மேல்பட்டி அஞ்சல்,
குடியாத்தம் தாலூக்கா. .... எதிரிகள்.

| | | |
|---|---|---|
| 1. | வரிசை எண். | சிசி. எண். 286/2023. |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | மேல்பட்டி காவல் நிலையம்<br>குற்ற எண்.86/2014, |
| 3. | குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர், வயது மற்றும் தந்தை பெயர் மற்றும் முகவரி | 1) பாண்டு வயது 48/2024,<br>த/பெ. முனிரத்தினம்.<br>2) கந்தன் வயது 37/2024,<br>த/பெ. செல்வம்.<br>3) தினேஷ்பாபு வயது 38/2024,<br>த/பெ. சோக்கு.<br>**அனைவரின் முகவரி:–**<br>அம்பேத்கர் நகர், கார்கூடர் கிராமம்,<br>மேல்பட்டி அஞ்சல்,<br>குடியாத்தம் தாலூக்கா. |

| | | |
|---|---|---|
| 4. | சம்பவம் நடந்த தேதி | 13.07.2014. |
| 5. | முறையீடு தேதி | 14.07.2014. |
| 6. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்த நாள் | --- |
| 7. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சரணடைந்த தேதி | 30.07.2014. |
| 8. | ஒப்படைத்தல்/அனுப்பி வைத்தல் தேதி (Commitment) | -- |
| 9. | விசாரணை துவக்கம் தேதி | 07.10.2023. |
| 10. | விசாரணை முடிவு தேதி | 18.01.2024. |
| 11. | தண்டனை அல்லது உத்தரவு | அரசு தரப்பில் இறுதி முடிவாக, இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் இன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, 1 முதல் 3 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்தான சி.பி.04/2023 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 1 ½ அடி நீளமுள்ள இரும்பு கத்தியின் ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 12. | தேதி தீர்ப்பு நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான காண்முடிவு/முடிவு | -- |
| 13. | காலதாமதத்திற்கான விளக்கம் | -- |

இவ்வழக்கானது கடந்த 23.03.2023 ஆம் தேதி நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு அரசுக்காக **அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை2,** அவர்களும், எதிரிகளுக்காக **திரு.B.ராஜன்பாபு,M.A.,B.L.,** கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களும் முன்னிலையாகி நடைபெற்று வந்த வழக்கில் இறுதியாக விசாரணைக்கு வரப்பெற்று நடைபெற்று வந்த வழக்கில் இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததும் இன்று 06.02.2024 ஆம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:-**

1.1. கடந்த 13.07.2014 ம் தேதி மாலை 16.30 மணிக்கு கார்கூர் அம்பேத்கர் நகர் பிரிட்ஜ்யிடம் வாதி மகன் சரத்குமார் என்பவர்களுக்கும் 1 முதல் 3 வரையினலான எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாகவும் வாதியின் சின்ன மகன் சஞ்சிகுமார் என்பவர் கிரிகெட் விளையாட செல்லும் போது எதிரிகள் வாதியின் மகனை வழிமடக்கி அசிங்கமாக பேசி, கையால் அடித்தும் கத்தியால் தலை மீது வெட்டி மிரட்டியதாகவும், மேலும் சாட்சி-1 சம்பத் என்பவரை 2 வது எதிரி கந்தன் அசிங்கமாக பேசியதாகவும், 1 வது எதிரி பாண்டு சாட்சி-2 சஞ்சிவ்குமாரை கத்தியால் தலை மீது வெட்டியும், சாட்சி-1 சம்பத்தை தலை மீது வெட்டியும் இரத்த காயத்தை ஏற்படுத்தி கத்தியை காட்டி மிரட்டியதாகவும், மேலும் சாட்சி-1 சம்பத் என்பவரை 3 வது எதிரி தினேஷ்பாபு முதுகின் மீது கையால் குத்தியும், சாட்சி-2 சஞ்சிவ்குமாரை கை பிடித்து முறுக்கியதாகவும் 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது மேல்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது கடந்த 04.08.2023 ம் தேதி நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1) (b)-ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு குவிமுச பிரிவு 204 ன் கீழ் அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது அரசு தரப்பு வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

4) பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவியபோது எதிரிகள் அக்குற்றங்களை மறுத்தார்கள். எனவே, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், எதிரிகள் இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார்கள் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால் எதிரிகள் மீது 341, 294(பி), 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வாசித்து விளக்கி கூறி வினவியபோதும் எதிரிகள் அக்குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எனவே, இவ்வழக்கு அரசு தரப்பின் சாட்சிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u> :–

6.1. அ.சா.5 திரு.முருகன் தனது சாட்சியத்தில் கடந்த 14.07.2014 ம் தேதி பகல் 12.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.குப்பன் நிலைய பொறுப்பில் இருந்த போது குடியாத்தம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சம்பத் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.86/2014 இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)–ன் படி அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாகவும், பின்பு அன்றே சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ் த/பெ. கோவிந்தன் மற்றும் ராஜேஷ் த/பெ. மனோகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு அதே

சாட்சிகள் முன்னிலையில் சுமார் 1 ½ அடி நீளமுள்ள கத்தி ஒன்றினை அ.சா.ஆ.6 ஆன கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், பின்பு சாட்சிகள் 1 முதல் 8 வரை சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு வேலூர் அமர்வு நீதிமன்றத்தில் எதிர்பார்ப்பு பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்வு வழக்கு சொத்தான சுமார் 1 ½ அடி நீளமுள்ள கத்தி ஒன்றினை அ.சா.ஆ.7 ஆன படிவம்-91ன் மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும், பின்பு அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய அ.சா.ஆ.8 ஆன மற்றும் அ.சா.ஆ.9 ஆன காயச்சான்றிதழ்களை பெற்றதாகவும், பின்பு இறுதி அறிக்கையை முடித்து எதிரிகள் மீது 341, 294(பி), 323, 324, 506(2)-ன் இதசபடி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6.2. மேற்குறிப்பிட்ட சாட்சிய விபரங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த சாட்சியங்களின் கூறுகளை குறித்து கேள்விகளாக குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரிகள் அந்த சாட்சிய கூறுகளை மறுத்தார். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறி தங்களது தரப்பை முடித்துக் கொண்டனர்.

6.3. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து எதிரிகள் சாட்சிகளை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, ஆயுதங்களால் தாக்கி, கொலைமிரட்டல் விடுத்துள்ளார்களா என்று அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதேயாகும்.

7) அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதுரை மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு தீர்மானிக்கப்படுகிறது.

8) **<u>அரசு தரப்பு வாதுரை</u>** :-

8.1. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்ய போதுமான வகையில் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீதான குற்றத் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதால் எதிரிகளுக்கு இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் தகுந்த தண்டனை வழங்கும்படியும் வாதிட்டார்.

9) **<u>எதிரி தரப்பு வாதுரை</u>** :-

9.1. எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. எனவே, எதிரிகள் இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்றும் எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

9.2. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மிகுந்த கவனத்துடன் ஆராயப்பட்டன. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்களின் இறுதி வாதமும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் முன்னிலையன கற்றறிந்த வழக்கறிஞரின் வாதமும் மிகுந்த கவனத்துடன் கருத்தில் கொள்ளப்பட்டன.

9.3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் தாக்கல் செய்யப்பட்டள்ள சான்றாவணங்களிலிருந்தும் இரு தரப்பு வாதங்களில் இருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழான

குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

10) <u>தீர்வு</u> :-

10.1. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 சம்பத் தனது சாட்சியத்தில் எதிரிகளை தெரியும் என்றும் அவர்கள் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 4,5 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், தங்கள் கிராமத்தில் அம்பேத்கர் நகரில் பிரிட்ஜ் ஓரத்தில் கூட்டமாக இருந்ததால் சென்று பார்த்ததாகவும், அப்பொழுது யாரோ தன்னை தள்ளிவிட்டார்கள் என்றும், தான் கீழே விழுந்ததில் தனக்கு தலையில் அடிப்பட்டது என்றும் அடிப்பட்ட தன்னை யாரோ குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், சிகிச்சையில் இருந்த போது போலீசார் தன்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கியதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 ஆன கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் எழுதியுள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும், வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தான் வழிமறித்து, அசிங்கமாக திட்டியதாகவோ, ஆயுதத்தால் தாக்கியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எனவே, அரசு தரப்பு அ.சா.1 சாட்சியத்தின் மூலம் 1வது எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.2. இவ்வழக்கு சம்பவத்தில் கண்ணுற்று பாதிக்கப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.2 சஞ்சிவ்குமார் தனது சாட்சியத்தில் எதிரிகளை தெரியும் என்றும், சுமார் 4,5 வருடத்திற்கு முன்பு தங்கள் ஊரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருக்கும் போது பசங்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும் அதில் யாரோ தன்னை

தள்ளிவிட்டதாகவும், அதில் தான் கீழே விழுந்ததில் தனக்கு தலையில் அடிப்பட்டது என்றும் அடிப்பட்ட தன்னை யாரோ குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், யார் தன்னை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தான் வழிமறித்து, அசிங்கமாக திட்டியதாகவோ, ஆயுதத்தால் தாக்கியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எனவே, அரசு தரப்பு அ.சா.2 அவர்களின் சாட்சியத்தின் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.3. இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 சரத்குமார் மற்றும் அ.சா.4 சசிக்குமார் இவர்களின் சாட்சியத்தில் சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஊரில் பிரச்சனை ஏற்பட்டதாகவும், யார் யாருக்கு பிரச்சனை நடந்தது என்று தெரியாது என்றும் சம்பவ சமயத்தில் அங்கு இல்லை என்றும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1 க்கும் அ.சா.2 க்கும் அடிப்பட்டதாக கேள்விப்பட்டதாகவும், மருத்துவமனை சென்று பார்த்ததாகவும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவர்களின் சாட்சியத்தில் கேள்விப்பட்டு தான் தெரிந்து கொண்டதாகவும், எதிரிகள் தான் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ வழிமறித்து, அசிங்கமாக திட்டியதாகவோ, ஆயுதத்தால் தாக்கியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள். எனவே, அரசு தரப்பு அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சியத்தின் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.4. அ.சா.4 திரு.முருகன் காவல் உதவி ஆய்வாளர் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் திரு.குப்பம் அவர்கள் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தை

பதிவு செய்து காவல் நிலைய குற்ற எண்.86/2014, இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்தியுள்ளதை குறித்தும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.குப்பன் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படாததும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) மேலும் எதிரிகளும், சாட்சிகளும் இவ்வழக்கில் சமாதனமாகிவிட்டதாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கு.வி.மு.ச பிரிவு 320 ன் கீழான மனு இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(ii) IPC–ன் கீழ் சமாதானம் செய்து கொள்ள இயலாத பிரிவுகள் என்பதால் மட்டுமே இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளை தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என முடிவு செய்கிறது.

12) இவ்வழக்கில் பிரதான சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கண்ட அரசு தரப்பு சாட்சி ஒத்துரைக்கப்படாத அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக இவ்வழக்கினை தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அ.சா.5 ஐ தவிர்த்து மற்ற அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராகவோ அல்லது இறுதி அறிக்கையில் கண்டவாறு குற்றச் சம்பவம் நடந்தது என்றோ சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வர முடியாது. எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, 1 முதல் 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட

நபர்கள் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர் ஆகிறார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13) எனவே, மேலே விளக்கப்பட்ட விபரங்களை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)–ன் இன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இவ்வழக்கில் வழக்குச் சொத்தான சி.பி.04/2023 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 1 ½ அடி நீளமுள்ள இரும்பு கத்தியின் ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 06.02.2024ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– M.N. ராஜநந்திவர்மசிவா,
நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

<u>பின் இணைப்புகள்</u>

**1) <u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

1. அ.சா.1 திரு. சம்பத்.

2. அ.சா.2 திரு. சஞ்சிவ்குமார்.

3. அ.சா.3 திரு. சரத்குமார்.

4. அ.சா.4 சசிகுமார்.

5. அ.சா.5 திரு. முருகன் காவல் உதவி ஆய்வாளர்.

**2) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

1. அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்.
2. அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலம்.
3. அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை.
4. அ.சா.ஆ.4 பார்வை மகசர்.
5. அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்.
6. அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசர்.
7. அ.சா.ஆ.7 படிவம்–91
8. அ.சா.ஆ.8 அ.சா.1 ன் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்.
9. அ.சா.ஆ.9 அ.சா.2 ன் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்.

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றுப் பொருள் | - | சுமார் 1 ½ அடி நீளமுள்ள கத்தி ஒன்று. |
| எதிரிகள் தரப்பு சாட்சி | - | இல்லை. |
| எதிரிகள் தரப்பு சான்றாவணம் | - | இல்லை. |
| எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள் | - | இல்லை |

ஒம்/– M.N. ராஜநந்திவர்மசிவா,
நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

**<u>குறிப்பு</u>**

1) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தனர்.
3)சாட்சிகள் எவரும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

மாண்புமிகு.தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர்,

(முழு கூடுதல் பொறுப்பு)

குடியாத்தம்.